**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 322/2022**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 06.02.2026.**

| | |
|---|---|
| **Name : அன்னகொடி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது, கடந்த 26.09.2022ம் தேதி காலை 06.00–08.30 மணிக்கு சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக குற்றஎண். 478//2022 சாலை விபத்து சம்மந்தமாக மேட்டூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவின் பேரில் அன்னபூரணி மற்றும் மைதீஷ் என்பவர்களுடைய பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்து இறப்பின் உண்மைத்தன்மையை அறியவேண்டி, சடலக்கூறாய்வு செய்தற்கு முன்பு மருத்துவர் திரு.விவேகானந்தன் முன்பு அடையாளம் காட்ட பணித்தார்.

2) நான் அன்றைய தினம் அன்னபூரணி என்பவருடைய பிரேதத்தை பகல் 08.30 மணிக்கு மருத்துவர் விவேகானந்தன் மற்றும் மைதீஷ் என்பவருடைய பிரேதத்தை பகல் 10.45 மணிக்கு மருத்துவர் விவேகானந்தன் அவர்களிடம் சடலத்தை அடையாளம் காட்டி ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் உறவினர் வசம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன். துணைகண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u> இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.